சார்பு நீதிமன்றம், மானாமதுரை.
முன்னிலை. திரு.எம்.சண்முக கனி, பி.ஏ., எல்.எல்.பி.
சார்பு நீதிபதி, மானாமதுரை.
2026ம் ஆண்டு மார்ச் மாதம் 13ம் தேதி வெள்ளிக்கிழமை

**அசல் வழக்கு எண்.29/2026**

(CNR No.TNSV140004432025)

கனரா வங்கி, மானாமதுரை கிளை சார்பாக
அதன் கோட்ட மேலாளர் ..வாதி

**/எதிர்/**

R. நாகேந்திரன் ..பிரதிவாதி

இவ்வழக்கு கடந்த 11.03.2026ம் தேதி இறுதியாக என் முன்பு விசாரணைக்கு கொண்டு வரப்பட்டு வாதி தரப்பில் கற்றறிந்த வழக்குரைஞர் திரு. M.ராமகிருஷ்ணன் அவர்கள் முன்னிலையாகியும், பிரதிவாதி நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜரில்லை என்பதால் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைப்பட்ச உத்திரவு பிறப்பிக்கப்பட்டும், வழக்கு கோப்புகளை பரிசீலித்தும், வாதி தரப்பு வாதுரையை கேட்டறிந்த பின்பும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையில் இருந்து இன்று இந்நீதிமன்றம் வழங்கிடும்,

**ஒரு தலைபட்ச தீர்ப்புரை**

வாதி வங்கி தரப்பில், தாவா தொகை ரூ.2,66,249.14/- மும், அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு 10.70% பின்வட்டி மற்றும் செலவுத்தொகையை வாதி வங்கிக்கு பிரதிவாதிகள் செலுத்த உத்தரவிடக்கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

<u>1) வாதி தரப்பு வழக்குரையின் சுருக்கம்:</u>

பிரதிவாதி MSMEs– கடன் பெறுவதற்காக வாதி வங்கியிடம் கடன் கோரி 12.04.2024– ஆம் தேதி வாதி வங்கியிடம் விண்ணப்பித்துள்ளார் என்றும், மேற்படி விண்ணப்பத்தினை பரிசீலித்த வாதி வங்கி 12.04.2024 அன்று ரூ.2,81,000/–ம் பிரதிவாதிக்கு கடன் வழங்க அனுமதி வழங்கியது என்றும் மேற்படி கடனிற்கு 12.04.2024– அன்று கடன் ஒப்பந்தம் பிரதிவாதி வங்கிக்கு ஏற்படுத்தி கொடுத்துள்ளார் என்றும் மேற்படி கடன் ஒப்பந்தத்தில் மேற்படி கடனை 9.25% வட்டியுடன் அல்லது கனரா வங்கி, அவ்வப்போது நிர்ணயிக்கும் வட்டி விகிதப்படி செலுத்துவதாக ஒப்புக்கொண்டுள்ளார் என்றும், வாதி வங்கி பிரதிவாதியிடம் கடனை திரும்ப செலுத்த பலமுறை கேட்டும் பிரதிவாதி கடனை வாதி வங்கிக்கு செலுத்த முன்வரவில்லை என்றும், வாதி வங்கி பராமரித்து வரும் கடன் கணக்கு விபரப்படி பிரதிவாதி ரூ.2,66,249.14/– மும், பின்வட்டியும் செலுத்த கடமைப்பட்டவர் என்றும் எனவே பிரதிவாதி திரும்ப செலுத்த வேண்டிய மேற்படி கடன் பாக்கி தொகையை பின்வட்டி, செலவுத் தொகையுடன் வசூலிக்க வேண்டி வாதி வங்கியால் தாவா தாக்கல் என்றும் கூறப்பட்டுள்ளது.

2) இந்த வழக்கில் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ள நிலையில், வாதி தரப்பு வழக்கு சாட்சி மற்றும் ஆவணங்களின் மூலமாக நிரூபிக்கப்பட்டுள்ளதா என்று தீர்மானிக்க வேண்டியுள்ளது. இந்த வழக்கில் வாதி வங்கியின் கிளை மேலாளர் நேதாஜி என்பவர் வா.சா.1 ஆக விசாரிக்கப்பட்டு, அவர் மூலமாக வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளது. பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம் எதுவும் முன்னிடப்படவில்லை.

3) இந்த வழக்கில் சாட்சியம் மற்றும் ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டது. வாதி தரப்பு வழக்கை மறுத்துக் கூற வேண்டிய நிலையில் உள்ள பிரதிவாதி இந்த வழக்கில் நீதிமன்றத்தில் அழைத்தும் ஆஜராகாத நிலையில் பிரதிவாதிக்கு எதிராக ஒருதலைபட்ச உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. இவ்வாறான சூழ்நிலையில் வாதி தரப்பு வழக்கு வா.சா.1ன் சாட்சியத்தின் மூலமாகவும், வா.சா.ஆ.1 முதல் வா.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் மூலமாகவும் நிரூபிக்கப்பட்டுள்ளது என்றே இந்நீதிமன்றம் கருதுகிறது. எனவே வாதி கோரியுள்ள தொகை வாதிக்கு கிடைக்கத்தக்கது என்று இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

முடிவில், வழக்கு செலவுத் தொகையுடன் அனுமதிக்கப்படுகிறது. வாதி வங்கிக்கு பிரதிவாதி தாவா தொகை ரூ.2,66,249.14/-மும் (ரூபாய் இரண்டு இலட்சத்து அறுபத்தாறாயிரத்து இருநூற்று நாற்பத்தொன்பது மற்றும் பதினான்கு பைசா மட்டும்), அதற்கு தாவா தாக்கல் செய்த தேதியிலிருந்து தொகை செலுத்தி தீரும் தேதி வரை வருடத்திற்கு 6% பின்வட்டியுடன் செலுத்த வேண்டுமென்றும் தீர்ப்பளிக்கப்படுகிறது.

இந்த தீர்ப்புரை என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் படித்துப்பார்த்து பிழை நீக்கம் செய்யப்பட்டு 2026-ஆம் ஆண்டு மார்ச் மாதம் 13 ஆம் நாள் அவையறிய பகரப்பட்டது.

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.13 13:57:03 +0500

சார்பு நீதிபதி,
மானாமதுரை.

**வாதி தரப்பு சாட்சியம்:**

வா.சா.1 நேதாஜி, மேலாளர், வாதி வங்கி.

**வாதி தரப்பு சான்றாவணங்கள்:**

வா.சா.ஆ.1 – கடன் விண்ணப்பம் அசல்

வா.சா.ஆ.2 – அனுமதி கடிதம் அசல்

வா.சா.ஆ.3 – கடன் ஒப்பந்தம் அசல்

வா.சா.ஆ.4 – வங்கி கணக்கு பட்டியல் உண்மை நகல்

வா.சா.ஆ.5 – மேலாளர் சான்று அசல்

**பிரதிவாதி தரப்பில் வாய்மொழி சாட்சியம் மற்றும் சான்றாவணம்:** இல்லை

SHUNMUGA KANI

Digitally signed by SHUNMUGA KANI
Date: 2026.03.13 13:57:11 +0500

**சார்பு நீதிபதி,**

**மானாமதுரை.**